பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

10 10 2023 7 15
செவ்வாய்க்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டு மக்களுடன் தாம் தொடர்புகொள்ள வாட்ஸ்அப் சேனல் சக்திவாய்ந்த தளமாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தொடக்க வேளாண் கடன் சங்கங்களை வலுப்படுத்த சிறப்பு கவனம் செலுத்தப்படுவதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

3. நாட்டில் கடந்த 9 ஆண்டுகளில் நகர்ப்புற மேம்பாட்டுக்காக 18 லட்சம் கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

4. காஸா பகுதியில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்புக்கு இடையே நடைபெற்று வரும் மோதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்து 300-ஐ தாண்டியுள்ளது.

5. உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 99 ரன்கள் வித்தியாசத்தில் நெதர்லாந்தை வென்றது.

- இனி விரிவான செய்திகள் -

- **<<<<>>>>**

நாட்டு மக்களுடன் தாம் தொடர்புகொள்ள வாட்ஸ்அப் சேனல் சக்திவாய்ந்த தளமாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக எக்ஸ் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த சேனல் மூலம் தம்முடன் இணைந்து மக்கள் தமது தகவல்களை உடனடியாக பெறலாம் என்று அவர் கூறியுள்ளார்.

வாட்ஸ்அப் சேனலின் இணைப்பையும் பிரதமர் அந்தப் பதிவில் வெளியிட்டுள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள மற்றொரு பதிவில் பெங்களூரு மெட்ரோ ரயில் வழித்தடத்தில் கரு ஊதா நிற வழிப்பாதை சேவைகள் தொடங்கியிருப்பதற்கு மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இது பெங்களூரு மக்களின் வாழ்க்கையை எளிதாக்குவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என்று திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை குடியரசுத் தலைவர் மாளிகையில் தான்சானியா அதிபர் டாக்டர் சமியா சுலுஹு ஹசன் சந்தித்துப் பேசினார்.

தான்சானியாவுடன் இந்தியாவுக்கு நூற்றாண்டு கால நட்புறவு உள்ளதாக குடியரசுத் தலைவர் தெரிவித்தார். தான்சானியாவில் 200 ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வம்சாவளியினர் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த சில ஆண்டுகளில் இருதரப்பு உறவுகள் முன்னேற்றம் அடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தான்சானியாவின் சான்சிபாரில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள சென்னை ஐஐடி-யின் வளாகம் ஆப்பிரிக்காவின் தொழில்நுட்ப கல்வி மையமாக மாறும் என்று திருமதி திரௌதி முர்மு நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

தொடக்க வேளாண் கடன் சங்கங்களை வலுப்படுத்த சிறப்பு கவனம் செலுத்தப்படுவதாக மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் 89-வது பொதுக்குழுக் கூட்டத்தில் நேற்று அவர் உரையாற்றினார்.

கூட்டுறவின் மூலம் வளம் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையை நிறைவேற்றுவதில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக முக்கிய பங்கு வகிக்கிறது என்று அவர் கூறினார்.

நாட்டில் முதலீட்டு வாய்ப்புகள் குறைவாக உள்ள 60 கோடி மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு கூட்டுறவு அமைப்புகள் சிறந்த பங்காற்றுவதாக அவர் தெரிவித்தார்.

பிரதமர் மோடியின் தலைமையின் கீழ்தான், கூட்டுறவுத் துறைக்கு தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக் காட்டினார்.

இதன் மூலம் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தவும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கூட்டுறவு அமைப்புகளின் பங்கை அதிகரிக்கவும் கடந்த 27 மாதங்களில் 54 முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மாநில அரசுகளின் உதவியுடன் தேசிய கூட்டுறவு தரவுத்தளம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் இதில் நாட்டில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் விரிவான தரவுகள் இடம்பெற்றுள்ளன என்றும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<>>>>

மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் ஆறு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று மொராக்கோ புறப்பட்டுச் செல்கிறார். அங்குள்ள மராகேச் நகரில் நடைபெறவுள்ள உலக வங்கி மற்றும் சர்வதேச செலாவணி நிதியத்தின் ஆண்டுக் கூட்டங்களில் அவர் பங்கேற்கிறார்.

அங்கு நடைபெறும் ஜி 20 நிதி அமைச்சர்கள் மத்திய வங்கி தலைவர்கள் கூட்டத்திலும் அவர் கலந்து கொள்கிறார்.

தமது மொராக்கோ பயணத்தின்போது மொராக்கோ, இந்தோனேசியா, பிரேசில், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் திருமதி நிர்மலா சீதாராமன் நடத்தவுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் கடந்த 9 ஆண்டுகளில் நகர்ப்புற மேம்பாட்டுக்காக 18 லட்சம் கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற உலக வாழ்விட தினம் தொடர்பான நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், 2014-ம் முதல் நகர்ப்புற திட்டங்களுக்கான முதலீடு கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றார்.

2014 ஆம் ஆண்டில், நகர்ப்புற கழிவுகள் மேலாண்மை சுமார் 17 சதவீதமாக இருந்தது எனவும் இப்போது அது 76 சதவீதமாக உயர்ந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

நிதி ஆதாரங்களைத் திரட்ட நகராட்சி நிதிப் பத்திரங்கள் போன்ற புதுமையான வழிகளைப் பின்பற்றுமாறு திரு ஹர்தீப் சிங் பூரி நகர்ப்புற அமைப்புகளை வலியுறுத்தினார்.

<<<<>>>>

குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கான செயல்முறைத் திட்டம் ஒன்றை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி ஸ்மிருதி இரானி புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

இது அங்கன்வாடிகள் நிலையில் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளை அடையாளம் கண்டு அதை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்த உதவும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஆயுஷ்மான்பவ திட்டத்தின் கீழ் கடந்த ஒரு மாதத்திற்குள் 3 லட்சம் யூனிட் ரத்தம் சேகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 2-ம் தேதி வரை நடைபெற்ற சேவை இயக்கத்தின் போது இந்த ரத்த தானம் தொடர்பான இயக்கம் செயல்படுத்தப்பட்டதாக அவர் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

மனித குலத்திற்கு சேவை ஆற்றும் வகையில் ரத்த தானம் செய்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

<<<<>>>>

நாடு முழுவதும் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனைகள் மற்றும் மருத்துக் கல்லூரிகளில் பிரத்யேக ஆயுஷ் கல்விப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும் என்று மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் திரு சர்பானந்தா சோனோவால் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்ற தேசிய ஆயுஷ் இயக்கத்தின் மேற்கு மண்டல ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், நாட்டில் பாரம்பரிய மருத்துவத் துறையில் 900-க்கும் மேற்பட்ட ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உள்ளன என்று கூறினார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய ஆயுஷ் துறை இணை அமைச்சர் திரு மகேந்திரபாய் முஞ்சபாரா, யோகா தொடர்பான நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் 57 வேட்பாளர்கள் கொண்ட மூன்றாவது பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது.

முதலமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் புத்னி தொகுதியிலும், மாநில உள்துறை அமைச்சர் திரு நரோத்தம் மிஸ்ரா, தாதியா தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.

230 உறுப்பினர்களைக் கொண்ட அம்மாநில சட்டப்பேரவைக்கு, ஆளும் பிஜேபி இதுவரை 135 இடங்களுக்கான வேட்பாளர்களை அறிவித்துள்ளது.

ராஜஸ்தான் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல் வேட்பாளர் பட்டியலையும் பிஜேபி நேற்று வெளியிட்டது. அதில் 41 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ராஜஸ்தான் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதலாவது பிஜேபி வேட்பாளர் பட்டியலில் 6 மக்களவை மற்றும் ஒரு மாநிலங்களவை உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

ஜெய்ப்பூர் ஊரக தொகுதி மக்களவை உறுப்பினரும் முன்னாள் மத்திய இணை அமைச்சருமான திரு ராஜ்யவர்தன் சிங் ரத்தோர் ஜோத்வாரா சட்டப் பேரவைத் தொகுதியில் போட்டியிடுவார் என பிஜேபி அறிவித்துள்ளது.

சத்தீஸ்கர் சட்டப் பேரவைத் தேர்தலுக்கு 64 பேர் கொண்ட இரண்டாவது வேட்பாளர் பட்டியலையும் பிஜேபி வெளியிட்டுள்ளது. முன்னாள் முதலமைச்சர் திரு ரமண் சிங், ராஜ்நந்த்கான் தொகுதியிலும், மத்திய பழங்குடியினர் நலத்துறை இணை அமைச்சர் திருமதி ரேணுகா சிங் பரத்பூர்-சோன்ஹாட் தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.

சத்தீஸ்கர் மாநில பிஜேபி தலைவர் திரு அருண் சாவ், லோர்மி தொகுதியில் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. 90 பேர் கொண்ட சத்திஸ்கர் சட்டப்பேரவைக்கு இதுவரை மொத்தம் 85 வேட்பாளர்களின் பெயர்களை பிஜேபி அறிவித்துள்ளது.

<<<<>>>>

தெலங்கானா சட்டப்பேரவை தேர்தலுக்கான பாரதிய ராஷ்ட்ரீய சமிதியின் தேர்தல் அறிக்கை வரும் 15ஆம் தேதி வெளியிடப்படவுள்ளதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களுடன் ஆலோசனை நடத்திய பின்னர், அக்கட்சித் தலைவரும் அம்மாநில முதலமைச்சருமான திரு. கே. சந்திரசேகர ராவ் இதனை வெளியிடவுள்ளதாக அக்கட்சியின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதனைத் தொடர்ந்து, பொதுக்கூட்டத்திலும் பங்கேற்கவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து காங்கிரஸ் கட்சி இரட்டை நிலைப்பாட்டைக் கடைபிடிப்பதாக பிஜேபி கூறியுள்ளது.

இது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு ராகுல் காந்தி கூறிய கருத்துகளுக்கு பிஜேபி கண்டனம் தெரிவித்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு தர்மேந்திர பிரதான் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், நாடு சுதந்திரம் அடைந்தது முதல் 2014-ம் ஆண்டு வரை, பல ஆண்டுகள் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை ஏன் நடத்தவில்லை என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பை காங்கிரஸ் முன்பு எதிர்த்து வந்துள்ளதாக திரு தர்மேந்திரப் பிரதான் கூறியுள்ளார்.

மத்திய அமைச்சர் திரு பூபேந்தர் யாதவும் இதே கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்காக காங்கிரஸ் எதையும் செய்யவில்லை என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் மண்டல் கமிஷன் அறிக்கை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டபோது முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அதை எதிர்த்ததாக அவர் கூறியுள்ளார்.

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலன்கள் குறித்து 1950-ம் ஆண்டுகளில் காகா காலேல்கர் கமிஷன் அளித்த அறிக்கையை காங்கிரஸ் அரசு செயல்படுத்தவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு சமூக நீதி மற்றும் சமூக நல்லிணக்கத்துக்கான அரசு என்று திரு பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சிக்கிமில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் வெள்ள நிலைமை குறித்து மத்திய அமைச்சரவை செயலாளர் ராஜீவ் கௌபா தலைமையிலான தேசிய பேரிடர் மேலாண்மை குழு நேற்று புதுதில்லியில் ஆய்வு செய்தது.

இந்தக் கூட்டத்தில், சிக்கிம் மாநில தலைமைச் செயலாளர் காணொலி வாயிலாகப் பங்கேற்றார்.

மாநிலத்தில் பெரும்பாலான பகுதிகளில் சாலை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அப்போது அவர் தெரிவித்தார்.

நிலைமையை மத்திய அரசு கண்காணித்து வருவதாகவும் நிலைமையை மதிப்பிடுவதற்காக அமைச்சகங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழு சிக்கிம் சென்றுள்ளது என்றும் இக்கூட்டத்தில் பங்கேற்ற, உள்துறை செயலாளர் திரு அஜய் குமார் பல்லா கூறினார்.

<<<<>>>>

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்புக்கு இடையே நடைபெற்று வரும் மோதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்து 300-ஐ தாண்டியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே காஸா பகுதியை முழுமையாக கைப்பற்ற இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் திரு யோவ் கேலன்ட் இஸ்ரேல் ராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே இந்த சண்டையில் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேலில் தமது நாட்டு மக்கள் 9 பேர் கொல்லப்பட்டிருப்பதாக அமெரிக்க அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த 10 பேர் உயிரிழந்திருக்க கூடும் என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஹமாஸ் நடத்திய தாக்குதலில் நேபாளத்தைச் சேர்ந்த 10 பேர் உயிரிழந்திருப்பதாகவும் 4 பேர் காயம் அடைந்துள்ளதாகவும் நேபாள வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் நியூசிலாந்து அணி நெதர்லாந்தை வென்றது.

ஹைதராபாத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 322 ரன் எடுத்தது.

323 ரன் என்ற வெற்றி இலக்குடன் பின்னர் களமிறங்கிய நெதர்லாந்து, 46 புள்ளி 3 ஓவரில் 223 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

**<<<<The End>>>>**